(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **81**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 யூன் 24, வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையினை கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) உள்நாட்டலுவல்கள் அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையும் கணக்கு அறிக்கையும்; மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயல்நிறைவேற்று மற்றும் கணக்கு அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வருடாந்த செயற்திறன் அறிக்கையும் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையினை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2012 ஆம் ஆண்டுக்கான சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொகுதி அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையினை இளைஞர், விளையாட்டு, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. மனுக்கள்:**

தணமல்வில, போதகம வீதியில் வதியும் திரு. டி.எம். குணசேனவினது 2016.02.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜே.எம். ஆனந்தகுமாரசிறி சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனு பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**3. தகவலுக்கான உரிமை சட்டமூலம்:** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தைத் தொடர்வதற்கான கட்டளை மீண்டும் வாசிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட வினா. ( 2016 யூன் 23 ஆம் திகதி)

"சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதம் தொடர்ந்தது.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்குவாராக" என மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.35 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.35 மணிக்கு லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என பாராளுமன்ற மறுசீரமைப் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமை தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 13 ஆம் முதல் 18 ஆம் வரி வரை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"சுருக்கப் பெயரும் நடைமுறைக் குவரும் தேதியும்.

1. (1) இச்சட்டம் 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச்சட்டம் என எடுத்துக்காட்டலாம்.

(2) இப்பிரிவினதும், பாகம் IV இனதும், பிரிவுகள் 23, 36, 40, 41, 42, 43, மற்றும் 44 என்பவற்றினதும் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் சான்றிதழ் எத்தேதியன்று புறக்குறிப்பிடப்பட்டுள்ளதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் மற்றெல்லாப் பிரிவுகளினதும் ஏற்பாடுகள், அத்தகைய பகிரங்க அதிகாரசபைகளின் அல்லது பகிரங்க அதிகாரசபைகளின் வகுதிகள் தொடர்பில் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் அமைச்சரால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய திகதிகளின் மீது நடைமுறைக்குவருதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு விதித்துரைக்கப்பட்ட திகதிகள் மேலே (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுதிப்படுத்தலின் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களின் பின்னராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளும் அத்தகைய உறுதிப்படுத்தலின் ஓராண்டிற்கு பிந்தாமல் அனைத்து பகிரங்க அதிகாரசபைகளுக்கும் ஏற்புடையாதல் வேண்டும்." ;

(பி.ப. 5.05 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

"விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் விவாதம் 2016 யூன் மாதம் 24 ஆம் திகதி நடைபெறும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக"எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்.

1 ஆம் பக்கத்தில் 6 ஆம் வரியைத் தொடர்ந்து கீழ்வருவனவற்றை சேர்க்க வேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(2) இச் சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தின் தத்துவங்கள், சிறப்புரிமைகள் மற்றும் செயன்முறைகளை மதிப்புக்குறைப்பனவாக இருத்தலாகாது".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

''அவமதிப்பாக உள்ளவிடத்து அல்லது நீதித் துறையின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையும் பேணுவதற்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளவிடத்து; '';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

''பாராளுமன்றத்தின் அல்லது சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மாகாண சபையொன்றின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து; '';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

''(க) எந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று தொடர்பாக முடிபொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையினதாக தகவலானது உள்ளவிடத்து; அல்லது

(ங) தகவலானது, அந்தரங்கமானதாக வைத்திருக்கப் படுவதற்கு இயைபான தேர்தல் சட்டங்களின் மூலம் தேவைப்படுத்தப்பட்டதும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடாத்தப்பட்டதுமான தேர்தலொன்று தொடர்பானதாக உள்ளவிடத்து, '';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

''தீங்கை விஞ்சியிருக்குமிடத்து, மறுக்கப்படுதலாகாது. '';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 1 ஆம் முதல் 5 ஆம் வரி வரை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் தகவலைப்பெற அணுகுதலை அளிப்பதுடன் தொடர்புடைய ஒரு பிரச்சினை தொடர்பில்

> தகவல் அலுவலர் ஆணைக்குழுவின் மதியுரையை நாடிப்பெறலாமென்பதுடன் ஆணைக் குழுவானது இயலுமானளவு வரைவானதாக பதிநான்கு நாட்களினுள் ஏதேனும் பட்சத்தில் அதன் மதியுரையினை வழங்கலாம். ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம்.

6 ஆம் பக்கத்தில் 16 முதல் 20 ஆம் வரி வரை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> “7. (1) ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையை வசதிப்படுத்தும் வகையில் அதன் எல்லா பதிவேடுகளையும் செயன்முறைத் தேவைப்பாடுகளுக்கிசையானவாறு அத்தகைய விதமாகவும் அத்தகைய வடிவத்திலும் உரியவாறு அட்டவணைப்படுத்தியும் குறியெண்ணிட்டும் பேணுதல் அதன் கடமையாதல் வேண்டும்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> (4 ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் கோரிக்கை பற்றிய எவ்விடயப்பொருளாகவுள்ளதோ அவ்விடயப்பொருளின் பதிவு அல்லது தகவலெதுவும் அத்தகைய கோரிக்கை அல்லது ஏதேனும் மேன்முறையீடு அல்லது அத்தகைய கோரிக்கை தொடர்பிலான நீதிமுறை நடவடிக்கை முடிவுறாதிருக்கும் போது அளிக்கப்படுதலாகாது.” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> “தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையைப் பிரசையொருவர்” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரி முதல் 5 ஆம் வரி வரை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> “(அ) அரசகரும மொழிகளில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இலத்திரனியல் வடிவத்தில் கிடைக்கச் செய்தலும் வேண்டும்; அத்துடன்” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> “ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அமைச்சருக்கான ஏதேனும் குறிப்பீடு, அரசியலமைப்பின் அத்தியாயம் XVII அ இன் கீழ் தாபிக்கப்பட்ட மாகாணசபையொன்றின் அமைச்சருக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குதலும் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 19 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> “வேண்டும்:
>
> ஆயின், எவ்வாறாயினும், அவசரமான கருத்திட்டமொன்றின் விடயத்தில், அத்தகைய கருத்திட்டம் தொடங்குவதற்கு ஒருவாரத்துக்கு முன்னர் தகவல் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அவசரத்துக்கான காரணங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும். ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 23 மற்றும் 24 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> “(2 ) (அ) ஓர் அமைச்சர், பிரசையொருவரால் அவர் சார்பில் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கையின் மீது,

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 07 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“ஒரு இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலரை விஞ்சும்; ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அமைச்சருக்கான ஏதேனும் குறிப்பீடு, அரசியலமைப்பின் அத்தியாயம் XVII அ இன் கீழ் தாபிக்கப்பட்ட மாகாணசபையொன்றின் அமைச்சருக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குதலும் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 14 மற்றும் 15 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“அறிக்கையானது, எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வறிக்கை அதனது அலுவலகத்திலும் அதன் அலுவலகமுறையான இணையத்திலும் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச்” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 27 ஆம் வரியை உடனடுத்து கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“(ஊ) தகவலை அறிவிப்பதற்கான மறுப்புக்கெதிரான மேன்முறையீடுகளின் எண்ணிக்கை;

(எ) பதிவேடுகளைப் பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அழித்தல் தொடர்பான செயல்முறைகள்; அத்துடன்

(ஏ) 8 ஆம் பிரிவின் கீழான அதன் செயற்பாடுகள்; ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியில் “ சங்கம்” எனும் சொல்லை உடனடுத்து கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘அது திறமைவாய்ந்த சட்டத்தரணியொருவரை அல்லது சட்டம் சார் கல்விமான் ஒருவரை சட்டத்தரணிகள் மற்றும் சட்டம்சார் கல்வியாளர்களுடனான கலந்தாலோசனையில் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும். ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 முதல் 18 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

19 ஆம் வாசகம்

17 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டு” ;

11 ஆம் பக்கத்தில் அதன் ஓரக் குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல். ” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 முதல் 24 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

25 ஆம் வாசகம்

21 ஆம் பக்கத்தில் 28 மற்றும் 29 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘(3 ) தகவலுக்கான கோரிக்கையானது, பிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன்” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

26 ஆம் வாசகம்

23 ஆம் பக்கத்தில் 5 மற்றும் 6 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘வற்றைக் குறித்துரைக்கின்ற அறிவித்தல் ஒன்றை அலுவலக வளவுகளினுள் துலாம்பரமான இடமொன்றிலும் அத்தகைய பகிரங்க அதிகாரசபை ஏதேனுமிருப்பின் அதன் இணையத்தளத்தின் மீதும் வெளிக்காட்டி” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 முதல் 30 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

31 ஆம் வாசகம்

27 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘ஆயின் எவ்வாறாயினும், பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் மேன்முறையீட்டினை உரிய நேரத்தில் கோப்பிடுவதற்கு அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காணரத்தினால் மேன்முறையீட்டாளர் தடுக்கப்பட்டுள்ளார் என அவர் திருப்திப்படின், பதினான்கு நாட்களைக் கொண்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர் மேன்முறையீட்டை அனுமதிக்கலாம்.” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 முதல் 33 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

34 ஆம் வாசகம்

29 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ‘‘அறிவிக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

35 முதல் 37 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

38 ஆம் வாசகம்

31 ஆம் பக்கத்தில் 19 ஆம் வரியில் ''ஆணைக்குழுவிற்கு'' எனும் சொல்லை உடனடுத்து கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

" ஒரு மாதக் காலப் பகுதியினுள்"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

39 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

40 ஆம் வாசகம்.

33 ஆம் பக்கத்தில் 23 மற்றும் 24 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ''ஊழியர் எவரும் இச்சட்டத்தின் கீழ் விடுவிக்கப்படுவதற்கு அல்லது வெளியிடப்படுவதற்கு"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 ஆம் வாசகம்.

33 ஆம் பக்கத்தில் 31ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ''இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கில்" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

42 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

43 ஆம் வாசகம்

37 ஆம் பக்கத்தில் 1 முதல் 9 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> ''(உ) எந்தக் கம்பனியில் அரசு, அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசும் பகிரங்கக் கூட்டுத்தாபனமும் பங்குகளின் இருபத்தைந்து

சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஒன்றாக வைத்திருக்கின்றனவோ அல்லது வேறுவகையில் கட்டுப்படுத்துகின்ற அக்கறையைக் கொண்டுள்ளனவோ, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள், சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அந்தக் கம்பனியொன்று; "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(ஒ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்படுகின்ற, அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டமுறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும்" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(ஓ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்படுகின்ற, அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டமுறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது தொழில்" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 ஆம் பக்கத்தில் 10 முதல் 18 வரையான வரிகளை நீக்கிவிடுமாறு பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

44 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அட்டவணை

“ அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்” எனும் பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**4. ஒத்திவைப்பு**: “இப்பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாரளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப.4.16 மணிக்கு பாராளுமன்றம் 2016 யூலை மாதம் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.